செ.வெ.எண்: 952 5.11.08

## செய்தி வெளியீடு

தமிழ்நாட்டிலுள்ள அரசு, அரசு நிதி உதவி பெறும் மற்றும் பகுதியாக நிதி உதவி பெறும் பள்ளிகளில் +1 பயிலும் அனைத்து வகுப்பைச் சார்ந்த மாணவ/மாணவிகளுக்கும் இலவச மிதிவண்டிகள் வழங்கப்படுகின்றன. 2008–09ம் ஆண்டுக்கான இலவச மிதிவண்டிகளைக் கல்வி ஆண்டின் தொடக்கத்திலேயே வழங்கப்படவேண்டுமென மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அறிவுறுத்தியதற்கிணங்க, மிதிவண்டிகள் கொள்முதல் செய்வதற்கான ஒப்பந்தப்புள்ளிகள் முடிவு செய்யப்பட்டு, கடந்த கல்வி ஆண்டின் மாணவர் சேர்க்கையின் அடிப்படையில் 2,38,900 மாணவர்கள் மற்றும் 2,83,750 மாணவிகள் ஆகமொத்தம் 5,22,560 பேர்களுக்கு மிதிவண்டிகள் வழங்குவதற்கான கொள்முதல் ஆணைகள் 19.6.2008 அன்று பிறப்பிக்கப்பட்டன. அதன்படி மிதிவண்டிகள் பள்ளிகளுக்கு அனுப்பப்பட்டு மாணவ/மாணவிகளுக்கு வழங்கப்பட்டு வருகின்றன.

2008–09ம் ஆண்டின் மாணவர்கள்/மாணவிகள் சேர்க்கை எண்ணிக்கை கடந்த ஆண்டு சேர்க்கையைவிட கூடுதலாக உள்ளது. மேலும், 2007–08ம் ஆண்டு 10ம் வகுப்புத் தேர்வில் தேர்ச்சி பெறத் தவறி மீண்டும் சிறப்புத்தேர்வு மூலம் தேர்ச்சி பெற்ற மாணவர்கள்/மாணவியர்கள் 30.9.2008 வரை பள்ளிகளில் +1 வகுப்பில் சேர்க்க அனுமதிக்கப்பட்டுள்ளார்கள். இவ்வாறு புதியதாக சேர்க்கப்பட்ட மாணவ/மாணவிகளை கணக்கில் எடுத்து தற்போது கூடுதலாகத் தேவைப்படும் மிதிவண்டிகளை வாங்குவதற்கான கொள்முதல் ஆணைகள் பிறப்பிக்கப்பட்டுள்ளன.

சிறப்புத் தேர்வில் தேர்ச்சி பெற்று தாமதமாக +1 வகுப்பில் சேர்ந்த மாணவ/மாணவிகளுக்கும் துரிதமாக மிதிவண்டிகள் வழங்க மாண்புமிகு

முதலமைச்சர் அவர்கள் அறிவுறுத்தியதன் அடிப்படையில் இப்பொருள் குறித்து மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் மற்றும் கைத்தறித்துறை அமைச்சர் அவர்கள் தலைமையில் 4.11.2008 அன்று நடைபெற்ற கூட்டத்தில் மாண்புமிகு பள்ளிக்கல்வித்துறை அமைச்சர், மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத்துறை அமைச்சர் ஆகியோர்களுடன் முதன்மைச் செயலர், பள்ளிக்கல்வித்துறை, செயலர், பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத்துறை, செயலர், ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை மற்றும் இத்துறைகளைச் சார்ந்த அதிகாரிகளும் கலந்து கொண்டு இப்பொருள் குறித்து விரிவாக ஆய்வு செய்தனர். மாவட்ட அளவில் மேற்படி மூன்று துறை அலுவலர்களும் கலந்து பேசி, மாணவர் சேர்க்கை தொடர்பான விவரங்களைச் சரிபார்த்து நவம்பர் 2008 இறுதிக்குள் அனைத்து மாணவ/மாணவிகளுக்கும் மிதிவண்டிகள் வழங்கி முடிப்பதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்படவேண்டுமென்று கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டது.

பள்ளி மாணவ/மாணவிகளுக்கு மிதிவண்டிகள் வழங்கப்பட்ட விவரம் அவர்களது பெயர்களுடன் தமிழக அரசின் http://www.tn.gov.in/ என்ற இணைய தளத்தின் முதன்மைப் பக்கத்தில் தோன்றும் Highlights-ல் Free Bicycle Distribution scheme for XI-List of beneficiaries என்ற தலைப்பில் பார்க்கலாம்.

ந.வாசுதேவன்
அரசு செயலாளர்

ஒளிப்படி, இவர்க்கு.
செ.பி. [illegible]
தலைமைச் செயலகம், சென்னை